# பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையானது இலங்கையுடனான 2024 உறுப்புரை IV ஆலோசனையை நிறைவுசெய்வதுடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான இரண்டாவது மீளாய்வினைப் பூரணப்படுத்துகின்றது

- பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையானது 2024 உறுப்புரை IV ஆலோசனையினையும் இலங்கையுடனான 48 மாத காலம் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான இரண்டாவது மீளாய்வினையும் நிறைவுசெய்து, அதன் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ) 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 336 மில்லியன்) தொகைக்கான உடனடி அணுகலினை நாட்டிற்கு வழங்குகின்றது.
- நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செயலாற்றம் வலுவடைந்து காணப்படுகின்றது. சமூக செலவிடல் மீதான குறிகாட்டி இலக்கினைத் தவிர, 2023 திசெம்பர் இறுதிக்கான அனைத்து கணியம்சார் இலக்குகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 2024 ஏப்பிறல் இறுதியளவில் நிறைவேற்றப்பட வேண்டிய அநேகமான கட்டமைப்புசார் அளவுகோல்கள் நிறைவுசெய்யப்பட்டன அல்லது தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இருப்பினும், பொருளாதாரம் இன்னமும் பாதிப்படையக்கூடிய தன்மையில் காணப்படுவதுடன் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மைக்கான பாதை தொடர்ந்தும் நிச்சயமற்றதன்மையினைக் கொண்டுள்ளது. சீர்திருத்த உத்வேகத்தினை நிலைபெறச்செய்தல் மற்றும் படுகடனை மறுசீரமைப்பதற்கான முயற்சிகள் என்பன பொருளாதாரத்தினை நீடித்து நிற்கின்ற மீட்சி மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை நோக்கிய பாதையொன்றில் இடம்பெறச்செய்வதற்கு இன்றியமையாதனவாகும்.
- பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மை என்பவற்றினை மீட்டெடுத்தல், விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல், நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல், வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களை மீள்கட்டியெழுப்புதல் மற்றும் ஆளுகையினை வலுப்படுத்துதல் உள்ளடங்கலாக வளர்ச்சி சார்ந்த கட்டமைப்புசார் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல் என்பவற்றிற்கான பரந்தளவிலான சீர்திருத்தங்கள் குறித்து உறுப்புரை IV ஆலோசனை கவனம் செலுத்தியது.

**வொஷிங்டன், டி.சி:** பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையானது 48 மாத காலம் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான இரண்டாவது மீளாய்வினை நிறைவுசெய்து, சிஎஉ 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 336 மில்லியன்) தொகையினை அதிகாரிகள் எடுப்பனவு செய்வதனை அனுமதிக்கின்றது. இது பன்னாட்டு நாணய நிதியத்தின் இதுவரையான காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியிடல் ஆதரவினை சிஎஉ 762 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1 பில்லியன்) தொகைக்குக் கொண்டுவரும். [1] நிறைவேற்றுச் சபை இலங்கையுடனான 2024 உறுப்புரை IV ஆலோசனையினையும் நிறைவுசெய்தது. [2]

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் சிஎஉ 2.286 பில்லியன் (ஒதுக்கீட்டின் 395 சதவீதம் அல்லது ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) தொகைக்கு 2023 மாச்சு 20 அன்று நிறைவேற்றுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டது. (23/79ஆம் இலக்க ஊடக வெளியீட்டினைப் பார்க்கவும் https://www.imf.org/en/News/Articles/2023/03/20/pr2379-imf-executive-board-approves-under-the-new-eff-arrangement-for-sri-lanka).விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் முதலாவது மீளாய்வானது சிஎஉ 254 மில்லியன் கொண்ட பகிர்ந்தளிப்புக்களுடன் 2023 திசெம்பர் 12 அன்று நிறைவேற்றுச் சபையினால் நிறைவுசெய்யப்பட்டது. (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 337 மில்லியன்; 23/439ஆம் இலக்க ஊடக வெளியீட்டினைப் பார்க்கவும் https://www.imf.org/en/News/Articles/2023/12/12/pr23439-sri-lanka-imf-executive-board-completes-first-review-under-eff-arrangement).

விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையின் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மை என்பவற்றினை மீட்டெடுத்தல், ஏழ்மையிலுள்ளவர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான பொருளாதார தாக்கத்தைத் தணித்தல், வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களை மீள்கட்டியெழுப்புதல், நிதியியல் துறை உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் மற்றும் ஆளுகை மற்றும் வளர்ச்சி வாய்ப்புக்களை வலுப்படுத்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டுள்ளது.

பொருளாதார மீட்சியின் சமிக்ஞைகள் தென்படுகின்றன. உண்மை மொ.உ.உற்பத்தியானது 2023ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் 3 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) விரிவடைந்தது. 2024 மேயில் பணவீக்கமானது 0.9 சதவீதமாகக் காணப்பட்டதுடன் மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2024 ஏப்பிறல் இறுதியளவில் ஐ.அ.டொலர் 5.5 பில்லியனிற்கு அதிகரித்தன. வரி அரசிறையானது 2023ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 9.8 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் ஆரம்ப மீதி மிகையொன்றிற்கு மேம்பட்டது. செயற்படாக் கடன்களில் மேம்பாடுகள் ஏற்பட்ட போதிலும், வங்கித்தொழில் துறையில் பாதிப்படையக்கூடிய குழுக்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

மீட்சியானது படிப்படியானதொன்றாகத் தொடர்ந்தும் காணப்படுவதுடன் நடுத்தர கால வளர்ச்சி வாய்ப்புக்கள் பொருத்தமான கொள்கைக் கட்டமைப்புக்கள் மீது தங்கியுள்ளன. தேர்தல்களைத் தொடர்ந்து படுகடன் மறுசீரமைப்பு மற்றும் கொள்கைப் போக்கில் நிச்சயமற்றதன்மைகளை எதிர்கொள்கின்ற வேளையில், மட்டுப்படுத்தப்பட்ட வங்கிக் கொடுகடன் மற்றும் இறைத் திரட்சி என்பவற்றைக் கருத்திற்கொண்டு 2024–2025 காலப்பகுதியில் வளர்ச்சி மிதமாக மீட்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. பணவீக்கமானது ஒரே தடவையில் ஏற்படும் காரணிகளினால் தற்காலிகமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடைமுறைக் கணக்கானது மேம்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் பணவனுப்பல்கள் என்பவற்றினால் உந்தப்பட்டு 2024இல் தொடர்ந்தும் நேர்மறையாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சீர்திருத்த உத்வேகம், குறிப்பாக அரசிறைத் திரட்சியில், குறைவடைந்து செல்வதிலிருந்து உள்நாட்டு இடர்நேர்வுகள் தோற்றம் பெறலாம். வெளிநாட்டு இடர்நேர்வுகள் தீவிரமான பிராந்திய முரண்பாடுகள், பொருட்களின் விலைத் தளம்பல் மற்றும் உலகளாவிய மெதுவடைதல் ஆகியவற்றுடன் இணைந்தவையாகக் காணப்படுகின்றன. படுகடன் மறுசீரமைப்பில் மெதுவான முன்னேற்றமானது நிதியிடல் இடைவெளிகளை விரிவடையச்செய்யக்கூடும்.

நிறைவேற்றுச் சபைக் கலந்துரையாடலினைத் தொடர்ந்து, பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பதிற்கடமைத் தலைவர் திரு. கென்ஜி ஒகாமுரா பின்வரும் அறிக்கையினை வெளியிட்டார்:

“நிதிய ஆதரவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கையின் செயலாற்றம் தொடர்ந்தும் வலுவாகக் காணப்படுகின்றது. சமூக செலவிடல் மீதான குறிகாட்டி இலக்கின் சிறியளவிலான பற்றாக்குறையினைத் தவிர, அனைத்து கணியம்சார் இலக்குகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அநேகமான கட்டமைப்புசார் அளவுகோல்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன அல்லது தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைச் சீராக்கங்கள் பலனளிக்கின்றன. பொருளாதாரம் மீட்சியடையத் தொடங்குகின்றது, பணவீக்கம் தொடர்ந்தும் தாழ்வாகக் காணப்படுகின்றது, அரசிறைச் சேகரிப்பு மேம்படுகின்றது மற்றும் ஒதுக்குகள் தொடர்ந்து திரட்சியடைகின்றன. இந்நேர்மறையான அபிவிருத்திகளுக்கு மத்தியில் பொருளாதாரம் இன்னமும் பாதிப்படையக்கூடிய தன்மையில் காணப்படுவதுடன் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மைக்கான பாதை தொடர்ந்தும் நிச்சயமற்றதன்மையினைக் கொண்டுள்ளது. தற்போது முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்பு, அரசிறைத் திரட்சி, ஒதுக்குச் சேகரிப்பு மற்றும் மீட்சிக்கு ஆதரவளிப்பதற்கான வங்கிகளின் இயலுமை என்பவற்றுடன் இணைந்த முக்கியமான பாதிப்படையக்கூடியதன்மைகள் தோற்றப்பாட்டினைத் தொடர்ந்தும் மழுங்கடிக்கின்றன. வலுவான சீர்திருத்த முயற்சிகள், போதியளவிலான பாதுகாப்புக்கள் மற்றும் அவசர திட்டமிடல் என்பன இவ்விடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு உதவுகின்றன.

“இறை நீடித்துநிலைத்திருக்கும்தன்மையை மீட்டெடுப்பதற்கு, நிலைபேறான அரசிறைத் திரட்டல் முயற்சிகள், நிகழ்ச்சித்திட்ட இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் படுகடன் மறுசீரமைப்பை உடனடியாக இறுதிப்படுத்தல் மற்றும் சமூக மற்றும் மூலதனச் செலவிடலைப் பாதுகாத்தல் என்பன

தொடர்ந்தும் இன்றியமையாதனவாகவுள்ளன. பொது நிதியியல் முகாமைத்துவத்தினை முன்னேற்றமடையச்செய்வதானது இறை ஒழுக்கவியலை மேம்படுத்தத் துணைபுரியுமென்பதுடன் படுகடன் முகாமைத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதும் அவசியமானதொன்றாகும்.

“நாணய நிதியிடலிலிருந்து தவிர்ந்து, மத்திய வங்கியின் சுயாதீனத்தினைப் பாதுகாப்பதற்கான நிலையான அர்ப்பணிப்பொன்றின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு நாணயக் கொள்கையானது விலை உறுதிப்பாட்டிற்கு முன்னுரிமையளிப்பதைத் தொடர வேண்டும். தொடர்ச்சியான செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மை மற்றும் சென்மதி நிலுவை வழிமுறைகளைப் படிப்படியாக இடைநிறுத்துதல் என்பன வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களை மீள்கட்டியெழுப்புவதற்கும் வெளிநாட்டு மீள்சமநிலைப்படுத்தலை வசதிப்படுத்துவதற்கும் தொடர்ந்தும் முக்கியமானதாகவுள்ளன.

“வங்கி மூலதனப் போதுமாந்தன்மையினை மீட்டெடுத்தல் மற்றும் அரசிற்குச் சொந்தமான வங்கிகளின் ஆளுகை மற்றும் மேற்பார்வையினை வலுப்படுத்துதல் என்பன படுகடன் வளர்ச்சியை மீளெழுச்சியடையச் செய்வதற்கும் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்பதற்கும் மிக முக்கிய முன்னுரிமைகளாகக் காணப்படுகின்றன.

“நீண்ட கால உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்ததன்மையினை வெளிக்கொணர்வதற்கான கட்டமைப்புசார் சவால்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அதிகாரிகள் தங்கள் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஆளுகைச் சீர்திருத்தங்களை உறுதியாக நடைமுறைப்படுத்தல்; ஏற்றுமதிகளையும் வெளிநாட்டு நேரடி முதலீட்டினையும் ஊக்குவிக்கும் பொருட்டு மேலும் வர்த்தக தாராளமயமாக்கல்; திறன்களை மேம்படுத்துவதற்கும் பெண் தொழிற்படைப் பங்கேற்பை அதிகரிப்பதற்குமான தொழில்சார் சீர்திருத்தங்கள்; மற்றும் வினைத்திறன் மற்றும் இறை வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கும், இறை இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், தனியார் துறைக்கு நியாயமான வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்குமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிச் சீர்திருத்தங்கள் என்பவற்றினை முக்கிய முன்னுரிமைகள் உள்ளடக்கின்றன.

**நிறைவேற்றுச் சபை மதிப்பீடு[3]**

சீர்திருத்தங்கள் பலனளிப்பதாகக் குறிப்பிட்டு, நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான அதிகாரிகளின் வலுவான செயலாற்றத்தினை நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் பாராட்டினர். பொருளாதாரம் மீட்சியடையத் தொடங்கியுள்ளது, பணவீக்கம் தொடர்ந்தும் தாழ்வாகக் காணப்படுகின்றது, அரசிறைச் சேகரிப்பு மேம்படுகின்றது மற்றும் ஒதுக்குகள் தொடர்ந்து திரட்சியடைகின்றன. இருப்பினும், தற்போது முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்பு மற்றும் வரவிருக்கின்ற தேர்தல்கள் என்பன உள்ளடங்கலாக முக்கியமான பாதிப்படையக்கூடிய தன்மைகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் தொடர்ந்தும் காணப்படுவதாக பணிப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். இப்பின்னணியில், பொருளாதார உறுதிப்பாடு மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும்தன்மை என்பவற்றை மீட்டெடுப்பதற்கும் அனைத்தையுமுள்ளடக்கிய நீண்ட கால வளர்ச்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு சீர்திருத்த உத்வேகத்தை நிலைநிறுத்துவதற்கும் பேரண்டப்பொருளாதாரக் கொள்கைகளைத் தொடர்ந்தும் வலுப்படுத்துமாறு அவர்கள் அதிகாரிகளை கேட்டுக் கொண்டனர்.

2025 வரவுசெலவுத் திட்டத்தினைப் பக்கபலமூட்டுகின்ற மேலதிக அரசிறை வழிமுறைகள், மேலதிக வரி நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் வரி விலக்களிப்புக்களை மட்டுப்படுத்தல் மற்றும் அவற்றை அதிகளவு வெளிப்படைத்தன்மையுடையனவாக மாற்றுதல் என்பவை இறை நீடித்துநிலைத்திருக்கும்தன்மையை மீட்டெடுக்க தேவைப்படுவதாக பணிப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். வளர்ச்சியை மேம்படுத்துதல், சமூக செலவிடலைப் பாதுகாத்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினை மேம்படுத்துதல் என்பவற்றிற்கு அவர்கள் அழைப்பு விடுத்தனர். இறை ஒழுக்கவியலை வலுப்படுத்தித் திடமான இறைக் கட்டமைப்பொன்றினைத் தாபிக்கக்கூடிய புதிய பொது நிதியியல் முகாமைத்துவச் சட்டமூலத்தினைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததைப் பணிப்பாளர்கள் வரவேற்றனர். படுகடன் முகாமைத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு மேலும் முயற்சிகள் தேவையெனவும் அவர்கள் குறிப்பிட்டனர். வலு விலையிடலில் செலவு மீட்சியினை அடைவதிலுள்ள

முன்னேற்றத்தைப் பணிப்பாளர்கள் வரவேற்று, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கான அதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டனர்.

இலங்கையின் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும்தன்மையை மீட்டெடுக்கும் பொருட்டு படுகடன் மறுசீரமைப்பை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பணிப்பாளர்கள் வரவேற்றனர். உத்தியோகபூர்வ கொடுகடன் வழங்குநர் குழுவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினையும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடனான இறுதி உடன்படிக்கைகளையும் விரைவாக இறுதிப்படுத்துமாறு அவர்கள் அழைப்பு விடுத்தனர். நிகழ்ச்சித்திட்ட இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வெளிநாட்டுத் தனியார் கொடுகடன் வழங்குநர்களுடனான மறுசீரமைப்புக்களை ஒப்பிடக்கூடியவாறும், வெளிப்படையாகவும், காலந்தவறாமலும் நிறைவுசெய்வதற்கு எத்தணிப்பதன் முக்கியத்துவத்தைப் பணிப்பாளர்கள் வலியுறுத்தினர்.

நாணயக் கொள்கைக்கு விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதானது முதன்மையான முன்னுரிமையாகத் தொடர்ந்தும் காணப்படுவதாகப் பணிப்பாளர்கள் வலியுறுத்தியதுடன் இது பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துதல், நாணய நிதியிடலிலிருந்து தொடர்ந்து விலகியிருத்தல் மற்றும் சந்தைகள் அனுமதிக்கின்றவாறு அரச பிணையக் கையிருப்புக்களைப் படிப்படியாக விளைவற்றதாக்குதல் என்பவற்றினைத் தேவைப்படுத்துகின்றது. மத்திய வங்கியின் சுயாதீனத்தை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் வலியுறுத்தினர். வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களைத் தொடர்ந்து கட்டியெழுப்புகின்ற வேளையில் வெளிநாட்டு மீள்சமநிலைப்படுத்தலை வசதிப்படுத்துவதற்கும் பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் நம்பகத்தன்மையினைப் பாதுகாப்பதற்கும் செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மையினைப் பேணுவதன் அவசியத்தைப் பணிப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். சென்மதி நிலுவை வழிமுறைகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கு அவர்கள் கோரினர்.

மீட்சிக்கு ஆதரவளிக்கும் பொருட்டு நிதியியல் துறைத் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பணிப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். எஞ்சியுள்ள உள்நாட்டுச் சட்டம் மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன்கள் என்பவற்றின் மறுசீரமைப்பு மற்றும் வர்த்தக மற்றும் அரசிற்குச் சொந்தமான வங்கிகளின் போதுமானளவிலான மீள்மூலதனவாக்கம் என்பவற்றின் துரிதமான நிறைவிற்கு அவர்கள் அழைப்பு விடுத்தனர். வங்கித்தொழில் சட்டத் திருத்தங்களின் சட்டவாக்கத்தினைப் பணிப்பாளர்கள் வரவேற்று, அரசிற்குச் சொந்தமான வங்கிகளின் மேற்பார்வை மற்றும் ஆளுகை என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டு அவற்றை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். பணம் தூயதாக்கலுக்கெதிரானதும் தீவிரவாதத்திற்கு நிதியிடலை ஒழிப்பதற்குமான கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு மேலும் முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய இயலளவு மேம்பாடு என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, ஆளுகை மற்றும் கட்டமைப்புசார் சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வதானது வளர்ச்சி வாய்ப்புக்களை வெளிக்கொணர்வதற்கு இன்றியமையாதனவாகுமென பணிப்பாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஆளுகையினைக் கண்டறிகின்ற அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள முக்கிய ஆளுகைச் சீர்திருத்தங்கள் குறித்த அதிகாரிகளின் நடவடிக்கைத் திட்டத்தை அவர்கள் வரவேற்று, அதன் உறுதியான நடைமுறைப்படுத்தலிற்குக் கோரிக்கை விடுத்தனர். வர்த்தகத்தை மேலும் தாராளமயமாக்குதல், முதலீட்டுச் சூழல் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வினைத்திறனை மேம்படுத்துதல், தொழிலாளர் சந்தையில் பாலின இடைவெளிகளைக் குறைத்தல் மற்றும் காலநிலையினால் பாதிப்படையக்கூடியதன்மைகளைத் தணித்தல் போன்ற சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமையளிக்குமாறும் பணிப்பாளர்கள் பரிந்துரைத்தனர்.

**இலங்கை: தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரக் குறிகாட்டிகள் 2021-2029**

| | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 | 2029 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பூர்வாங்கம் | எறிவுகள் | | | | | |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பணவீக்கம்** (சதவீதத்தில்) | | | | | | | | | |
| உண்மை மொ.உ.உற்பத்தி | 4.2 | -7.3 | -2.3 | 2.0 | 2.7 | 3.0 | 3.1 | 3.1 | 3.1 |
| பணவீக்கம் (சராசரி) 1/ | 6.0 | 45.2 | 17.4 | 7.0 | 5.8 | 5.4 | 5.2 | 5.1 | 5.0 |
| பணவீக்கம் (கால முடிவில்) 1/ | 12.1 | 54.5 | 4.0 | 6.9 | 5.5 | 5.4 | 5.2 | 5.1 | 5.0 |
| மொ.உ.உற்பத்திச் சுருக்கி வளர்ச்சி | 8.0 | 47.5 | 17.5 | 9.8 | 6.9 | 5.4 | 5.2 | 5.1 | 5.0 |
| பெயரளவு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி | 12.6 | 36.6 | 14.8 | 11.9 | 9.8 | 8.5 | 8.5 | 8.3 | 8.3 |
| **சேமிப்புக்கள் மற்றும் முதலீடு** (மொ.உ.உற்பத்தியின் சதவீதத்தில்) | | | | | | | | | |
| தேசிய சேமிப்புக்கள் | 33.0 | 27.6 | 33.9 | 32.5 | 31.0 | 31.3 | 31.9 | 31.8 | 31.8 |
| அரசு | -7.3 | -6.4 | -6.0 | -3.4 | -1.0 | -0.1 | 0.3 | 0.7 | 0.7 |
| தனியார் | 40.4 | 34.0 | 39.9 | 35.9 | 31.9 | 31.4 | 31.6 | 31.1 | 31.0 |
| தேசிய முதலீடு | 36.7 | 28.6 | 30.8 | 32.1 | 32.1 | 32.4 | 32.8 | 32.7 | 32.6 |
| அரசு | 7.4 | 5.5 | 3.7 | 5.0 | 5.1 | 5.2 | 5.1 | 5.2 | 5.2 |
| தனியார் | 29.4 | 23.1 | 27.1 | 27.1 | 27.0 | 27.3 | 27.7 | 27.5 | 27.4 |
| சேமிப்புக்கள் - முதலீட்டு மீதி | -3.7 | -1.0 | 3.1 | 0.5 | -1.1 | -1.2 | -0.9 | -0.9 | -0.8 |
| அரசு | -14.7 | -11.9 | -9.6 | -8.4 | -6.0 | -5.3 | -4.8 | -4.5 | -4.4 |
| தனியார் | 11.0 | 10.9 | 12.8 | 8.8 | 4.9 | 4.1 | 3.9 | 3.6 | 3.6 |
| **அரச நிதி** (மொ.உ.உற்பத்தியின் சதவீதத்தில்) | | | | | | | | | |
| அரசிறை மற்றும் கொடைகள் | 8.3 | 8.4 | 11.1 | 13.6 | 15.1 | 15.3 | 15.4 | 15.4 | 15.4 |
| செலவினம் | 20.0 | 18.6 | 19.4 | 20.9 | 20.3 | 19.9 | 19.5 | 19.2 | 19.2 |
| ஆரம்ப மீதி | -5.7 | -3.7 | 0.6 | 1.0 | 2.3 | 2.3 | 2.3 | 2.3 | 2.3 |
| மத்திய அரச மீதி | -11.7 | -10.2 | -8.3 | -7.3 | -5.2 | -4.6 | -4.1 | -3.8 | -3.8 |
| மத்திய அரச மொத்த நிதியிடல் தேவைகள் | 31.0 | 34.1 | 27.8 | 24.9 | 23.7 | 20.5 | 16.6 | 13.1 | 11.9 |
| மத்திய அரச படுகடன் | 102.7 | 115.9 | 109.8 | 108.8 | 108.4 | 108.3 | 106.6 | 103.2 | 100.1 |
| பொதுப் படுகடன் 2/ | 114.8 | 126.3 | 115.7 | 114.2 | 113.1 | 112.5 | 110.2 | 106.5 | 103.1 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பணம் மற்றும் கொடுகடன்** (சதவீத மாற்றம், காலப்பகுதியின் நிறைவு) | | | | | | | | | |
| ஒதுக்குப் பணம் | 35.4 | 3.3 | -1.5 | 18.8 | 11.0 | 8.5 | 8.5 | 8.3 | 8.3 |
| விரிந்த பணம் | 13.2 | 15.5 | 7.3 | 14.9 | 10.4 | 8.5 | 8.5 | 8.3 | 8.3 |
| உள்நாட்டுக் கொடுகடன் | 19.5 | 18.8 | -1.2 | 9.3 | 3.6 | 2.5 | 2.3 | 2.4 | 6.7 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 13.1 | 6.4 | -0.8 | 7.2 | 9.2 | 9.3 | 9.5 | 9.4 | 9.3 |
| தனியார் துறைக்கான கொடுகடன் (பணவீக்கத்திற்காகச் சீராக்கப்பட்டது) | 7.2 | -38.8 | -18.2 | 0.2 | 3.4 | 4.0 | 4.3 | 4.3 | 4.3 |
| மத்திய அரசாங்கத்திற்கும் அரச கூட்டுத்தாபனங்களுக்குமான கொடுகடன் | 26.5 | 31.1 | -1.6 | 11.0 | -0.9 | -3.4 | -4.7 | -5.5 | 3.2 |
| **சென்மதி நிலுவை** (ஐ.அ.டொலர் மில்லியன்களில்) | | | | | | | | | |
| ஏற்றுமதிகள் | 12,499 | 13,106 | 11,911 | 12,913 | 13,624 | 14,261 | 14,903 | 15,591 | 16,384 |
| இறக்குமதிகள் | -20,638 | -18,291 | -16,811 | -20,059 | -22,565 | -23,706 | -24,362 | -25,255 | -26,363 |
| நடைமுறைக் கணக்கு மீதி | -3,285 | -744 | 2,644 | 412 | -926 | -1,031 | -804 | -819 | -840 |
| நடைமுறைக் கணக்கு மீதி (மொ.உ.உற்பத்தியின் சதவீதத்தில்) | -3.7 | -1.0 | 3.1 | 0.5 | -1.1 | -1.2 | -0.9 | -0.9 | -0.8 |
| நடைமுறைக் கணக்கு மீதி தேறிய வட்டி (மொ.உ.உற்பத்தியின் சதவீதத்தில்) | -2.1 | 0.1 | 4.3 | 2.8 | 1.3 | 1.1 | 1.5 | 1.6 | 1.5 |
| ஏற்றுமதிப் பெறுமதி வளர்ச்சி (சதவீதம்) | 24.4 | 4.9 | -9.1 | 8.4 | 5.5 | 4.7 | 4.5 | 4.6 | 5.1 |
| இறக்குமதிப் பெறுமதி வளர்ச்சி (சதவீதம்) | 28.5 | -11.4 | -8.1 | 19.3 | 12.5 | 5.1 | 2.8 | 3.7 | 4.4 |
| **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** (காலப்பகுதியின் நிறைவு) | | | | | | | | | |
| ஐ.அ.டொலர் மில்லியன்களில் | 3,139 | 1,898 | 4,387 | 5,605 | 7,174 | 9,262 | 13,466 | 15,105 | 15,286 |
| பொருட்கள் மற்றும் பணிகளின் எதிர்பார்க்கப்படுகின்ற | 2.0 | 1.2 | 2.4 | 2.7 | 3.3 | 4.1 | 5.8 | 6.2 | 6.3 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இறக்குமதிகளின் மாதங்களில் ஒதுக்குப் போதுமாந்தன்மையினை அளவிடுகின்ற (ARA) கலப்பு அளவீட்டின் சதவீதத்தில் | 24.7 | 16.3 | 37.8 | 47.9 | 58.6 | 73.1 | 100.2 | 108.7 | 108.5 |
| **பயன்படுத்தக்கூடிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** (காலப்பகுதியின் நிறைவு) 3/ | | | | | | | | | |
| ஐ.அ.டொலர் மில்லியன்களில் | 1,565 | 462 | 2,951 | 4,169 | 7,174 | 9,262 | 13,466 | 15,105 | 15,286 |
| பொருட்கள் மற்றும் பணிகளின் எதிர்பார்க்கப்படுகின்ற இறக்குமதிகளின் மாதங்களில் | 1.0 | 0.3 | 1.6 | 2.0 | 3.3 | 4.1 | 5.8 | 6.2 | 6.3 |
| ஒதுக்குப் போதுமாந்தன்மையினை அளவிடுகின்ற (ARA) கலப்பு அளவீட்டின் சதவீதத்தில் | 12.3 | 4.0 | 25.4 | 35.6 | 58.6 | 73.1 | 100.2 | 108.7 | 108.5 |
| **வெளிநாட்டுப் படுகடன்** (அரச மற்றும் தனியார்) | | | | | | | | | |
| ஐ.அ.டொலர் பில்லியன்களில் | 58.4 | 57.4 | 52.7 | 53.6 | 55.6 | 58.0 | 62.3 | 64.0 | 65.8 |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | 65.9 | 77.0 | 62.5 | 61.1 | 64.4 | 65.7 | 68.5 | 67.2 | 65.0 |
| **ஞாபகார்த்த விடயங்கள்:** | | | | | | | | | |
| பெயரளவு மொ.உ.உற்பத்தி (ரூபா பில்லியன்களில்) | 17,612 | 24,064 | 27,630 | 30,917 | 33,958 | 36,839 | 39,959 | 43,287 | 46,869 |
| செலாவணி வீதம் (சராசரி காலப்பகுதி) | 198.8 | 322.6 | 327.5 | … | … | … | … | … | … |
| செலாவணி வீதம் (காலப்பகுதியின் நிறைவு) | 200.4 | 363.1 | 323.9 | … | … | … | … | … | … |

மூலங்கள்: இலங்கை அதிகாரிகளினால் வழங்கப்பட்ட தரவுகள் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர் மதிப்பீடுகள்.

1/ கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

2/ மத்திய அரச படுகடன், பொதுவாக உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (அதாவது, வெளிநின்ற நிதியக் கொடுகடன் மற்றும் பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் வசதி ஏற்பாடுகள்) என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. படுகடன் புள்ளிவிபரங்கள் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு 2023இன் இறுதியில் நிறைவடைந்துள்ளதாக தற்போது கருதுகின்றன.

3/ முன்னைய ஆண்டின் இறக்குமதி உள்ளடக்கத்தின் 3 மாதங்களுக்கு மேலாக மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் உயர்வடைந்தவுடன் பயன்படுத்தக்கூடியதாக மாறும் சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதி (2022இல் ஐ.அ.டொலர் 1.4 பில்லியன்) நீங்கலாக.

[1] சிஎஉ புள்ளிவிபரங்கள் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட நாளன்று சிஎஉ ஒன்றிற்கான ஐ.அ.டொலரின் சந்தை வீதத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

[2] பன்னாட்டு நாணய நிதியத்தின் உடன்படிக்கை உறுப்புரைகளின் உறுப்புரை IVஇன் கீழ், பன்னாட்டு நாணய நிதியம் உறுப்புரிமை நாடுகளுடன் பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் இருபுடைக் கலந்துரையாடல்களை நடத்துகின்றது. அலுவலர் குழுவொன்று நாட்டிற்கு விஜயம் செய்து, பொருளாதார மற்றும் நிதியியல் தகவல்களைச் சேகரித்து, நாட்டின் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் கொள்கைகள் குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடுகின்றது. தலைமையகத்திற்குத் திரும்பியதும், அலுவலர்கள் அறிக்கையொன்றினைத் தயாரிப்பதுடன் இது நிறைவேற்றுச் சபையின் கலந்துரையாடலிற்கு அடிப்படையாக அமைகின்றது.

[3] கலந்துரையாடலின் முடிவில், சபையின் தலைவரார முகாமைத்துவப் பணிப்பாளர் நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுவதுடன் இச்சுருக்கம் நாட்டின் அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றது. சுருக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் தரநியமங்களின் விளக்கத்தை இங்கே காணலாம்: http://www.IMF.org/external/np/sec/misc/qualifiers.htm.